1996 பிப்ரவரி 28]

ஏதேனும் பணிகளை இப்போது தொடங்கிச் செய்து கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாய்' நிறுவனம் உரிமை பெற்ற ஒரு வர்த்தக நிறுவனம். மத்திய அரசு உரத்திற்கு வேண்டிய மானியத்தை உர தயாரிப்பாளர்களுக்கு நேரடியாகத் தருகிறது. எனவே அவர்களிடத்திலே 'தாய்' நிறுவனம் உரத்தைப்பெற்று தன்னுடைய முகவர் மூலமாகத் தந்தால் அதிலே எந்தவித பயனும் உழவர்களுக்குச் சென்று அடையமுடியாது. எனவேதான் உர வியாபாரத்தை 'தாய்' நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிறுத்திவிட்டது. ஆனால் அதே நேரத்திலே வேளாண்மையைச் சார்ந்த தொழிலைத் துவங்குவதற்கு யார் ஒருவர் தமிழகத்திலே முதலீடு செய்வதற்கு முன்வந்தாலும் அவரோடு கூட்டாக அந்தத் தொழிலை இணைந்து நடத்துவதற்கு இன்றைக்கு முயற்சிகள் மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 152, டாக்டர் வெ.சரோஜா, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

152—

பால் வினியோகத்தை மேம்படுத்துதல்

** 61672—டாக்டர் வெ.சரோஜா:*

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி நகரில் ஆவின் பால் வினியோகம் செய்யும் முறையை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு.தே.ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) சங்ககிரியில் நாளொன்றுக்கு 450 லீட்டர் பாக்கெட் பால் பொதுமக்களுக்கு தற்போது விற்பனை செய்யப்படுகிறது. தற்போது வழங்கப்பட்டு வரும் தினசரி அளவான 450 லிட்டரை, 1000 லிட்டராக உயர்த்துதல் போன்ற நடவடிக்கைகளில் சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் ஈடுபட்டுள்ளது.

[1996 பிப்ரவரி 28

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெண்மை புரட்சி கண்டுள்ள நம்முடைய தங்கத் தலைவியின் தன்னிகரற்ற ஆட்சியில், பெருகிவரும் மக்கட்தொகையைக் கணக்கில் கொண்டும், மக்களுடைய தேவையைக் கருத்தில்கொண்டும், மகளிரால் இயக்கப்படும் சங்ககிரியைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களில் பால் பூத்துக்களை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் செயற்குறிப்பில் உள்ளது.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 450 லிட்டரிலேயிருந்து 1000 லிட்டர் ஒரு நாளைக்குத் தேவை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்தத் தேவையை அதிகரித்து, தற்போது ஒரு நாளைக்கு 5000 லிட்டர் தேவைப்படும் என்ற நிலையில் அந்த பால் பூத்துக்களை அமைக்கும் செயற்குறிப்பை இவ்வாண்டே உடனடியாக நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 153, டாக்டர் எஸ்.சுந்தரராஜ், மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

153—

படச்சுருள் வினியோகம்

** 35138—டாக்டர் எஸ்.சுந்தரராஜ் :*

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் உற்பத்தியாகும் படச்சுருள் எக்ஸ்ரே பிலிம் வகைகளை மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் இராணுவம் ஆகியன பாண்டிச்சேரியிலிருந்து வினியோகிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் வாங்குகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், இதனால் தமிழக அரசிற்கு வரி இழப்பு ஏற்படுகிறதா ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS